IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO.160/2022

Deposition of Witness P.W.4 (LW5)

| | |
|---|---|
| NAME | – திரு.தண்டபாணி |
| FATHER NAME | – ரங்கநாயகர் |
| VILLAGE | – கீழ்முட்டுகூர் |
| TALUK | – கே வி குப்பம் |
| OCCUPATION | – விவசாய கூலி |
| AGE | – 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 30.06.2025.

1, 3, 6 மற்றும் 7 எதிரிகள் ஆஜர். எதிரிகள் 2, 4 மற்றும் 5 ஆஜர் இல்லை மனு ஏற்பு. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

முதல் விசாரணை (P.W.4)

நான் கீழ்முட்டுகூர் கிராமத்தில் வசிக்கிறேன் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரிலுள்ள 2வது கையெழுத்து என்னுடையது. சுமார் 5, 6 வருடத்திற்கு முன்பாக கங்கையம்மன் கோவில் எதிரில் போலிசார் என்னிடம் பார்வை மகசரிலுள்ள கையெழுத்து பெற்றார்கள். பார்வை மகசரிலுள்ள கையெழுத்து அ.த.சா.ஆ 3 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. அதை எதற்காக செய்தேன் என்று எனக்கு தெரியாது. கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையெழுத்து அ.த.சா.ஆ.4 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –

11.06.2020 காலை 6 மணிக்கு நானும் ஏழுமலையும் எல்.என்.புரம் கிருஷ்ணன் வீட்டிடம் நின்று கொண்டிருந்தபோது போலிசார் கொலை நடந்த

இடத்தை பார்வையிட்டு எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. பின்னர் காலை 6.30 மணிக்கு சம்பவயிடத்திலிருந்து ரத்தம் தோய்த மண் சிறிதளவும், ரத்தம் தோயாத மண் சிறிதளவும், சிறிய பூந்தொட்டி மற்றும் உடைந்த ஓடுகள் எங்கள் முன்னிலையில் கைப்பறுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், நான் அதில் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளிடமிருந்து அனுகூலம் பெற்று கொண்டு எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> – நான் கையெழுத்து செய்த இடத்திற்கும் இறந்து போன கிருஷ்ணன் வீட்டிற்கும் இடையே சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம்இருக்கும்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 30.06.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN

Additional District Judge (FTC),
Vellore.